# மகாஜனக் கல்லூரி

## நிறுவியவர் நினைவு தின உரை
## 2016

திரு.சிவகௌரிபாலன்
தலைவர்
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
கனடா

24-06-2016

## நிறுவியவர் நினைவு தின உரை

மதிப்புக்குரிய அதிபர் அவர்கட்கும், முதன்மை அதிதி அவர்களுக்கும் மற்றும் மேடையில் அமர்ந்திருக்கும் விசேட அதிதிகளுக்கும், மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர்களுக்கும், மகாஜனக் கல்லூரி அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் அவர்கட்கும், இங்கு வருகை தந்திருக்கும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், மற்றும் கல்லூரியின் மாணவச் செல்வங்கள் ஆகியோருக்கும் எனது அன்பான வணக்கங்கள் உரித்தாகட்டும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின், நிறுவியவர் நினைவு தின விழாவில் பங்குகொண்டு நினைவுதின உரையாற்ற எனக்குச் சந்தர்ப்பம் அளித்த அதிபர் அவர்கட்கு முதல் நன்றியைத் தெரிவிக்கின்றேன். இன்று போர் முடிந்து 7 ஆண்டுகள் முடிந்த நிலையில், பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டு, கல்லூரி வாழ்க்கை பழைய நிலைக்கு வந்து கல்வி, விளையாட்டு, கலை என்பன முன்னோக்கி நகரும்போது, **“பேணிப் பாதுகாத்தலும், பராமரித்தலும்”** என்ற தலைப்பில் என் நினைவுப் பேருரையைத் தொடங்க விரும்புகின்றேன். இதற்கு எங்கள் பாடசாலையில் எழுந்தருளியுள்ள எல்லாம் வல்ல சிவகாமி அம்மாள் சமேத ஆனந்த நடராசப் பெருமானை வணங்கிப் பேருரையைத் தொடங்குகின்றேன்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியை முடித்துக்கொண்ட நான், எனது தந்தையார் அதிபர் சிவகுருநாதன் அவர்களுடன் வந்து, 1984ஆம் ஆண்டு உயர்தர வகுப்பில் மகாஜனவில் கால் பதிக்கின்றேன். அவருடன் வரும்போது, எனது தந்தையார் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் பற்றியும், அவர் மைந்தன் தெ.து.ஜெயரத்தினம் பற்றியும் கூறியவை

இன்றும் என் மனதில் நிலைத்து நிற்கின்றது. அன்று எனது வகுப்பாசிரியர் மதிப்புக்குரிய திரு.சுந்தரலிங்கம் அவர்கள். அன்று எமது அதிபராக காலஞ்சென்ற பெரும் மதிப்புக்குரிய திரு.சண்முகசுந்தரம் கடமையாற்றினார். அதிபர் திரு.சண்முக சுந்தரம் அவர்கள் தமிழில் மிகவும் பாண்டித்தியம் கொண்டவர். இவரது காலத்தில் கல்லூரியின் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருந்ததுடன், தமிழ்மொழி மேலுள்ள ஆழமான பற்றுக்காரணமாக பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் கையெழுத்துப் பிரதிகளான இலக்கிய ஆக்கங்களைத் தேடியெடுத்து புத்தக வடிவில் வெளியிடுவதற்குப் பல வழிகளிலும் இவர் உதவிபுரிந்து எமது கல்லூரிக்கும், பாவலர் அவர்கட்கும் பெருமையைத் தேடிக்கொடுக்கும் விதத்தில் மலர் ஒன்று கல்லூரியால் வெளியிடப்பட்டது.

பெற்றதாயையும், பிறந்த பொன்னாட்டையும், கற்ற கல்விக்கூடத்தையும் நாம் இவ்வுலகில் வாழும் வரையும் மறக்க முடியாது. மறக்கமுடியாத எத்தனையோ நிகழ்வுகள் எம் வாழ்நாளில் தோன்றலாம். அவைகள் யாவும் வெவ்வேறு நிகழ்வுகளால் காலத்தோடு அழிந்துவிடும். ஆனால், பெற்றதாயும், பிறந்த பொன்னாடும், கல்விகற்ற பாடசாலையும் என்றும் எம்மனதில் நிலைத்து நிற்கும் என்பது உண்மை.

எனது கல்லூரி ஆரம்பமே ஆனந்தமாக இருந்தது. அப்பொழுது T வடிவில் அமைந்த முன் கட்டிடம், அதனைச் சூழத் தொடர் வகுப்புக் கட்டிடங்கள், மாமர, தேக்கமரச் சோலை, நடுவில் விளையாட்டு மைதானம். அன்று புகழ்பூத்த ஆசிரியர்களிடம் கல்விகற்க வாய்ப்புக் கிடைத்தது நான் செய்த பாக்கியமென நினைக்கின்றேன். நான் படித்த காலத்தில், வருடாவருடம் உள்நாட்டுப் பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டு சென்றது. அப்படியிருந்தும், எமது கல்லூரி, கல்வி, கலாச்சாரம், விளையாட்டு என்பனவற்றில்

முன்னிலையில் நின்றது. இன்றுகூட நான் நினைக்கின்றேன், ஏன் திரும்ப பாடசாலையில் சேர்ந்து படிக்கக் கூடாது? என்று! அவ்வளவிற்கு பாடசாலை வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருக்கும். மழைகாலத்தில் முழங்கால் வரை உள்ள வெள்ளத்தில் வெள்ளம் கலக்கிய நாட்களை எண்ணிப்பார்த்தால் மீண்டும் அந்நாள் திரும்ப வராதா என மனம் கேட்கின்றது.

**அன்பான மாணவர்களே!**

**கல்வி**

கல்வி என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத்தகைமை என்பவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். இந்த உலகில் ஒருவர் பெறுகின்ற அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனலாம். தரமான கல்வியைப் பெற்றவர்கள் மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவர்களாக, மற்றவர்களை வழிநடாத்தும் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும். நுட்பமாகச் செயல்படுகின்ற, கூர்மையான அறிவுடையவராக இருந்து, தானும் நடந்து மற்றவர்களையும் வழிநடத்தல் வேண்டும்.

கல்வி இரு பெரும் குழுவினரின் தேவைகளை உள்ளடக்கியது. ஒன்று சமுதாயம்; மற்றையது மாணவர்கள். ஒரு சமுதாயம் அதன் வளர்ச்சிக்கு மாணவர்களின் கல்வி வளர்ச்சியையே எதிர்பார்க்கின்றது. மாணவர்களுக்குத் தேவையான அறிவையும், திறமைகளையும் போதித்து, அதன்மூலம் தங்கள் சமுதாயத்தில் உயர்வுபெற மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் அவசியமாகின்றன. அவர்கள் பெறும் கல்வி அவர்களது சாத்தியமிக்க இலட்சியங்களை அடைய அவர்களுக்கு உதவுவதாக அமைய வேண்டும்.

**மாணவர் - ஆசிரியர் உறவு**

ஆசிரியர் திறம்படக் கற்பிக்கவும், மாணவர் செம்மையுறக் கற்றிடவும் வகுப்பறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் இடையே நிலவும் நல்லிணக்கச் சூழலே, ஆசிரியர் - மாணவர் உறவு எனலாம். ஆசிரியர்கள், மாணவர்களது இன்பம், துன்பம் இரண்டிலும் பங்குகொள்ளல் அவசியம். மாணவர்கள் உடல் சோர்வோ, மனச்சோர்வோ அடையும்போது அவர்களுக்கு ஊன்றுகோலாக இருந்து அவர்களை உற்சாகப்படுத்தி அவர்கள் நலம்நாட வேண்டும். அவர்கள் வெற்றிபெறும்போது அவர்களைப் பாராட்டி அவர்களது வெற்றியில் பங்குகொண்டு மகிழவேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு விளங்கி அவர்களது கல்வித்துறைசார் நாட்டங்களை அடையாளம் கண்டு, அவர்களது திறமைகளை வளர்க்க ஊக்கம் கொடுத்து, அவர்களின் குறைகளை நீக்க அவர்களோடு சேர்ந்து உழைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரிடத்தும் ஒவ்வொரு திறமை மறைந்திருக்கும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சமமான வாய்ப்புக்களைக் கொடுத்து ஊக்குவித்தால் அவர்கள் திறன்கள் வெளிப்படும். அறிவுத் திறன் குறைந்த மாணவர்களுக்கு அறிவு புகட்டி, அவர்களை உயர்வடையச் செய்வதே நல்லாசிரியர்களின் கடமையாகும்.

**நல்லொழுக்கம்**

மாணவர்கள் வளர்க்க வேண்டியது ஒழுக்கம். அதுபோல், மாணவர்களை உயர்த்துவதும் ஒழுக்கம்தான். ஒழுக்கம் என்ற சொல் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பெறுவதே. மாணவர்களே!

மற்றவர்களுடன் மோதாமல், மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாது நடப்பது, வாழ்வது நல்லொழுக்கமாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" ஒழுக்கம் எனக் கூறுகிறார் திருவள்ளுவர்.

மனிதர்களாகிய நாம் ஓர் சமூகப் பிராணி. மனித வாழ்வு ஒரு சமூக வாழ்வு. மனிதனின் சமூக வாழ்வுக்குத் தீங்கு செய்வனவெல்லாம் தீய பழக்கமாகும். தீய பழக்கங்கள் தவிர்க்கத் தக்கன. மாணவர்களை சமூக வாழ்வில் நிலைபெறச் செய்வனவெல்லாம் நல்லொழுக்கமேயாகும்.

மாணவர்களே! விவேகானந்த அடிகளார் ஒழுக்கத்தை இவ்வாறு கூறுகின்றார்:

"உலகம் வேண்டுவது ஒழுக்கமே! சுயநலம் தீய ஒழுக்கம்! சுயநலமற்றதே நல்லொழுக்கம்." ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நல்லொழுக்கத்தைக் கற்பித்து அவர்களை நாளைய சமுதாயத்தின ஒழுக்கசீலர்களாக்குங்கள்.

**முன்மாதிரி**

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களும், அவரது மகன் ஜெயரத்தினம் அவர்களும் எங்களுக்கு வழிகாட்டியாக, முன்மாதிரியாக வாழ்ந்தார்கள். இவர்கள்போல் உலகில் வழிகாட்டியாகவும், முன்னுதாரணமாகவும் எத்தனையோ மகான்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்று தம் சொல்லாலும், செயலாலும் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். மாணவர்களாகிய நீங்களும் கல்வியில் உயர்நிலை எய்தி,

விளையாட்டில் உயர்நிலை எய்தி, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**பேணிப் பாதுகாத்தலும் பராமரித்தலும்**

பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தமிழ் மக்களின் மொழி, சமயம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்காகவே இக்கல்விக் கூடத்தை உருவாக்கினார். அவர் மைந்தன் ஜெயரத்தினம் அவர்கள், தந்தை கொடுத்த பள்ளியைப் பேணிப் பாதுகாத்து, அதை ஒரு பல்கலைக்கழகமாக உயர்த்தினார். அதன்பின் வந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இந்த சிறப்புமிக்க விழுமியத்தைப் பேணிக்காத்து வருவதோடு மட்டுமல்லாமல், மேலும் உயர்த்தி இன்றைய தேவைகளை ஈடுசெய்யக்கூடிய கல்விக்கூடமாக முன்னெடுத்துச் செல்கிறார்கள். அன்றாட பராமரித்தல் மிகவும் முக்கியமானது. இதை எமது பழைய மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து செய்துவருவதால்தான் இன்று மகாஜன மாதா அழகிய முகத்தோடும் புன்சிரிப்போடும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றாள்! எனவே, தொடர்ந்தும் எமது கல்லூரியைப் பேணிப் பாதுகாத்து,
பராமரித்து வரவேண்டும்; இதை நீங்கள் முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

மகாஜனக் கல்விக்கூடம் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றிய காலத்து நினைவுகளை இரைமீட்டு அலசும்போது, என் மனதில் தோன்றுவது அன்று எப்படி இப்பொக்கிசத்தைப் பேணிப் பாதுகாத்து பராமரித்தார்கள் என்பதும், தொடர்ந்து பழைய மாணவர்கள் இதற்கு உறுதுணையாக நின்றார்கள் என்பதும்தான். இது வாழையடி வாழையாக தமிழர் மரபில் நடந்துவரும் ஓர் நிகழ்வு. தந்தை சொத்துக்களைப் பாதுகாத்து பிள்ளைகளிடம்

கொடுக்க, பிள்ளைகள் அச்சொத்தைப் பராமரித்து தம் பிள்ளைகளிடம் கொடுப்பது எமது மரபு. இருபதாம் நூற்றாண்டில் இந்துக்கள் மதம் மாறும் நேரத்தில் பாவலர் துரையப்பாபிள்ளை காலத்தின் குரலாக, வாழையடி வாழையாக வந்த நாவலர் பாரம்பரியத்தின் சொத்து எனலாம். அவர் பரந்த அடிப்படையில் ஆழமாகவும், அகலமாகவும் அப்பொழுதிருந்த சமூக பொருளாதார கலாசாரப் பின்னணியில் பணிகள் செய்தார். சைவ சமயத்தின் பாதுகாவலனாகத் திகழ்ந்தார்.

1910ஆம் ஆண்டில் பாவலர் அவர்கள் தனது வீட்டில் பாடசாலையை ஆரம்பித்து, அம்பனைக்கு வந்தபோது மகாஜனக் கல்லூரிக்கு மதில் கட்டப்படவில்லை. ஓலைவேலி, முற்பக்கத்தில் வரிசையாக வானோங்கி நின்ற பனைமரங்கள், படிக்க இரண்டு தென்னோலைக் கொட்டில்கள். 1926ஆம் ஆண்டு பாவலர் அவர்கள் சரஸ்வதி வித்தியாசாலை என்ற ஆரம்பப் பாடசாலையை அதே இடத்தில் ஆரம்பித்து மகாஜனவுக்கு உதவும் வண்ணம் நடாத்தி வந்தார். பின்னர் சரஸ்வதி வித்தியாசாலை மகாஜனவுடன் இணைந்தது. 1929ஆம் ஆண்டு பாவலர் இறைவனடி சேர்ந்தார்.

பாவலர் விட்டுச்சென்ற கல்விக்கூடத்தைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பை அவரது மைத்துனர் சின்னப்பா அவர்கள் ஏற்று பாடசாலையை சிறப்பாக நடாத்தினார். 1932ஆம் ஆண்டு பாவலரின் மூத்த மகன் மகாஜன சிற்பி தெ.து.ஜெயரத்தினம், தமது மாமனாருடன் இணைந்து தனது தந்தையின் “தீர்க்கமான தியானமதில் தேறிவந்த” மகாஜனக் கல்லூரியின் எழுச்சிக்கு மூலவிசையாக விளங்க முன்வந்தார். இவர் பல பொறுப்புக்களை எடுத்து மகாஜனவின் எழுச்சிக்கு வித்திட்டார்.

1945ஆம் ஆண்டில் தலைமை ஆசிரியர் சின்னப்பாபிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தார். மகாஜனக் கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்கள், ஊர் மக்கள் வேண்டிக்கொள்ள, பாவலரின் மைந்தன் ஜெயரத்தினம் அவர்கள் அத்தலைமைப் பதவியை எடுத்துக் கொண்டு தனது பணியைச் சிறப்பாக நடாத்தினார்.

இவர் தலைமையேற்ற சில நாட்களில் "ஆங்கில உயர் கலைக்கல்லூரி" என மாற்றம்செய்யப்பட்டது. மேலும் கல்லூரியின் மகுட வாசகமான **"உனை நீ அறி"** என்பது கல்லூரியின் மகுடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்டுதோறும் பல புதுமைகளை ஜெயரத்தினம் அவர்கள் புகுத்தினார். முதல் இரண்டு ஆண்டுகளில், விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டது. J.S.S.A. இல் சேர்ந்துகொண்டமை, பௌதீகம், இரசாயனம், விலங்கியல் பாடங்களை மாணவர்களுக்கு கற்பிக்க ஆரம்பித்தது, இதற்காக இந்தியா சென்று விஞ்ஞான ஆசிரியர்களைக் கூட்டிவந்தமை, கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப் பட்டமை என்பன முக்கிய பணிகளாக அமைந்தன.

1949ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் கல்விக்கூடம் முதலாம் தர (Grade I) பாடசாலையாக அவரது மைந்தனின் கடின உழைப்பால் உயர்த்தப்பட்டது. 1954ஆம் ஆண்டு, யாழ் முற்றவெளியில் கார்ணிவல் நடாத்தியும், மலேசியா, சிங்கப்பூர் சென்று பெற்ற நிதிகளும் கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு உறுதுணையாயின. இந்தச் சந்தர்ப்பத்தில், எனது மனதில் எழுவதென்னவென்றால், சட்டத்தரணி திரு.செல்வஸ்கந்தன் அவர்களின் தந்தையார் திரு.இராசரத்தினம் அவர்களும், MCFED தலைவர் திரு.ஜெயவர்மனின் தந்தையார் திரு.சிவஞானசுந்தரம் அவர்களும் அதிபர் திரு.ஜெயரத்தினம் அவர்களுடன் தோளோடு தோளாக நின்று அந்தக் கார்ணிவேலின் வெற்றிக்காக

உழைத்தார்கள். தமது தந்தையரின் வழியைப் பின்பற்றி, திரு.செல்வஸ்கந்தன் அவர்களும், திரு.ஜெயவர்மன் அவர்களும் இன்று மகாஜனவின் உயர்ச்சிக்கு முக்கிய பங்குகொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். அதிபர் ஜெயரத்தினம் அவர்களுக்கு உறுதுணையாக தெல்லிப்பழை முதலாவது சமாதான நீதவான் திரு.வை.சரவணமுத்து, திருவாளர்கள் கீரிமலை செல்லையா, சோதி நாகரட்ணம் ஆகியோருடன் இன்னும் சில பெரியோர்களும், மலேசியா, சிங்கப்பூர் சென்று பண உதவிகள் பெற்றுவந்தார்கள் என்பதையும் இவ்விடத்தில் கூற விரும்புகிறேன்.

இவற்றின் பயனாக, கட்டிடங்கள் பல எழுந்தன. பல்கலைக்கழக புகுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆய்வுகூடங்கள், விடுதிச்சாலை, திறந்தவெளி அரங்கு, பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம், புத்தகசாலை, தேநீர்சாலை, தொழில்நுட்பக்கூடம் என பல்வகைக் கட்டிடங்கள் அமைக்கப் பட்டன. நடராஜர் திருக்கோவிலும் அமைந்தது. மாணவர் தொகை பன்மடங்காக அதிகரித்தது. தலைசிறந்த ஆசிரியர்களை நியமித்து, தரத்தால் உயர்த்தினார் பாவலர் மகன் ஜெயரத்தினம் அவர்கள்.

1960ஆம் ஆண்டு பொன்விழாவினை இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் தெரியும்வண்ணம் மிகவும் சிறப்பாக நடாத்தி, 1961ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரி "Super Grade" ஆக தரம் உயர்த்தப்பட்டது.

விஞ்ஞான, கணித கல்வியின் பாரிய வளர்ச்சியே கல்லூரியை உன்னதமான நிலைக்கு இட்டுச்சென்றது. இதற்காக அதிபர் ஜெயரத்தினத்துடன் அயராது உழைத்த கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் பெரிதும் போற்றப்படவேண்டியவர்கள். கல்லூரியின் விளையாட்டுத் துறையில் மகாஜனா கண்ட பெருவெற்றிகளை

எண்ணிப்பார்த்து பெருமிதமடைகிறோம். பத்து முறை தொடர்ந்து மகாஜனா உதை பந்தாட்டத்தில் வெற்றிகொண்டது. இலங்கையிலேயே இது ஒரு சாதனை! அதை நாம் மறக்கவும் முடியாது. இந்த நேரத்தில் திரு.T.P.பத்மநாதன் அவர்களின் சேவையும் நினைவுகூரத்தக்கது.

பாவலரின் பாதையிலேயே எங்களுக்கு வாய்த்த அதிபர்கள், ஆசிரியர்கள், அனைவரும் நாடகத்தில் ஆர்வமுள்ளவர்களாகவும், நாடகக் கலையில் வல்லவர்களாகவும் விளங்கினார்கள். தொடர்ச்சியாக 1965ஆம் ஆண்டு முதல் மகாஜனக் கல்லூரி அகில இலங்கை நாடகப் போட்டிகளில் 5 தடவை முதலிடம் பெற்று சாதனை படைத்தது. இவ்வெற்றிக்கு முதுகெலும்பாக இருந்த அமரர் கதிரேசபிள்ளை ஆசிரியர் அவர்களை நாம் நினைவுகூரவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பிரபல கல்லூரியாக விளங்கிய மகாஜனவிற்கு வன்னி, மலையகம் போன்ற இடங்களிலிருந்தும், நூற்றுக்கணக்கான மாணவர்கள் வருகைதந்து பாடசாலை விடுதியில் தங்கியிருந்து படித்தனர். இன்று அவர்கள் பேரறிஞர்களாகத் திகழ்கிறார்கள். விடுதி சிறிய முறையில் நடாத்தப்பட்டதால், விடுதி மாணவர்கள் Extra Curricular அதாவது மேலதிக பாட விதானங்களிலும் பங்குபற்றி, சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்தார்கள். பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல் விஞ்ஞான கூடங்கள் உயர்தர வகுப்புகளுக்கு மிகவும் தரமாக அமைந்ததால் அப்பாடங்களில் பயிற்சிகளிலும், பரிசோதனைகளிலும் மாணவர்கள் ஆர்வத்தோடும், சிரத்தை யோடும் ஈடுபட்டு, சிறந்த பெறுபேறுகளுடன் பல்கலைக்கழகம் சென்றதன் மூலம் கல்லூரியின் வளர்ச்சி மேலும் தரம் உயர்ந்தது. 1970ஆம் ஆண்டில் உயர்தர வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை கூடியதால், வகுப்பறைகளில் இடமின்மையால், மாணவர்கள் விறாந்தைகளிலும் அமர்ந்து

படிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது இவ்வாறு மாணவர் தொகையை அதிகரித்து சாதனைபுரிந்த அந்த ஆசிரியர்களை எம்மால் மறக்க முடியாது. அவர்களுக்கு நாம் தலை வணங்குகிறோம்.

1970ஆம் ஆண்டு பாவலர் மகன், மகாஜன சிற்பி ஜெயரத்தினம் அவர்கள் இறைவனடி சேர்ந்தார். எமது கல்லூரியின் புகழ்பூத்த மாணவருள் ஒருவராகிய மகாகவி அவர்கள், பாவலரின் மகன் ஜெயரத்தினம் அவர்கள் தம் தந்தையின் சொத்தை எப்படிப் பேணிப் பாதுகாத்து பராமரித்தார் என்பதைக் கவிதைமூலம் கூறுகிறார்.

"தந்தை தொடக்கித் தரும் ஓர் சிறுபள்ளி
இந்த விதமாய் எழும்பி யிருக்கிறதே!
வாயில் பெரிது: மதில்கள், நிலம் பெரிது:
கோவில் பெரிது: வகுப்பறைகள், கூடங்கள்,
ஆயும் இடம், நூலகம், அரங்கு மண்டபங்கள்,
யாவும் பெரிதே - இதனால் இவற்றை எல்லாம்
காவல் புரிதல் மிகவும் கடிது ஆகும்"

அன்று பாவலர் மகன் ஜெயரத்தினம் அவர்கள் **"பேணிக்காத்தல், பராமரித்தல், முன்னெடுத்துச் செல்லல்"** ஆகிய மூன்று அம்சங்களிலும் முன்னுரிமை கொடுத்து தீர்க்கதரிசனத்துடன் நடந்துகொண்டார். அன்றாட வேலைகளான கல்லூரி வளாகம் கூட்டுதல், மலசலகூடங்கள், குடிநீர் வசதிகள் சுத்தமாகவும், பாவனைக்குரிய முறையிலும் வைத்திருத்தல், விளையாட்டு மைதானம் துப்பரவாகவும், சிறந்த முறையிலும் வைத்திருத்தல், விஞ்ஞானகூடங்களை நல்லமுறையில் வைத்திருத்தல், கட்டிடங்கள் யாவற்றையும் சிறந்த முறையில் கண்காணித்து பராமரித்தல்,

சிற்றூழியர்களை அமர்த்தி, கல்லூரியை நல்ல முறையில் பேணி, பராமரித்து மகாஜனவின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய சிற்றூழியர்களை நாம் ஒருபோதும் மறக்கமுடியாது. இவர்கள் "எங்கட பள்ளிக்கூடம்" என்ற உணர்வோடு செயல்பட்டார்கள்.

அமரர்

தே.து.ஜெயரத்தினம் அவர்களின் மறைவுக்குப் பின் காலஞ்சென்ற அதிபர்களான M.மகாதேவா, P.குமாரசாமி, S.சிவசுப்பிரமணியம், A.ராமசாமி, P.கனகசபாபதி, K.S.இரத்திநேஸ்வர ஐயா, பொன்.சோமசுந்தரம், T.சண்முகசுந்தரம், V.கந்தையா ஆகியோர் கல்லூரியை திறம்பட பேணிப் பாதுகாத்து, நல்ல பெறுபேறுகளை எடுத்து கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தனர். எமது அன்புக்குரிய அதிபர் கனகசபாபதி அவர்களின் காலத்தில் "ஜெயரத்தினம்" மண்டபம் கட்டப்பட்டு, 1979ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதியில் இயல்பு நிலை மிகவும் சீர்குலைந்து வாழ்க்கை நிலை தடுமாற்றம் கொள்ளத் தொடங்கியது. கல்லூரி பலவிதமான இக்கட்டான சூழ்நிலைக்குள் இயங்கும் நிலை ஆரம்பமாகியது. அக்காலகட்டத்தில் அதிபர் நாகராஜா அவர்கள் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அளவெட்டியிலும், பண்டத்தரிப்பிலும், இணுவிலிலும், மருதனார்மடத்திலும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மகாஜனக் கல்லூரி இயங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. திரு.நாகராஜா அவர்கள் அப்போது எவ்வாறு இலங்கையில் பிரபல்யமான கல்லூரியை தற்காலிகமாக இடம்பெயர்ந்த மருதனார்மடத்தில் நிலைகொள்ளச் செய்தார் என்பதும் சொத்துக்களை எப்படிப் பேணிப் பாதுகாத்தார் என்பதும், நாகராஜா அவர்களின் தலைமைத்துவத்தை - அவரின் கண்ணியத்தை எடுத்துக் காட்டுகின்றன. அவர் பேணிப் பாதுகாத்து, பராமரித்ததன் பயனால்தான் மகாஜனக் கல்லூரி இன்று நிலைகுலையாமல் தனது சொந்த இடத்தில் இன்று செயல்படுகின்றது. இவ்வேளையில்

மகாஜனவின் மைந்தன், முன்னாள் ஆசிரியர் சிறிபாஸ்கரன் அவர்களின் அயராத முயற்சியால்தான் எமது கல்லூரி தனது சொந்த இடமான அம்பனைக்கு 1999ஆம் ஆண்டு வந்து செயல்படக்கூடியதாக இருந்தது. அதிபர் நாகராஜா அவர்கள் இளைப்பாற, திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்று 2006ஆம் ஆண்டு வரை கல்லூரியை நல்ல முறையில் நடாத்திவந்தார்.

இந்த இருண்ட காலத்தில் மகாஜன அன்னையின் கட்டிடங்கள் யாவும் சேதமாகிவிட்டன. ஆனால், எமது கல்லூரியைப் பேணிப் பாதுகாத்து பல இடங்களுக்குக் கொண்டு சென்று, மீண்டும் அம்பனைக்குக் கொண்டுவந்து பேணிக்காத்து, பராமரித்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எல்லோருக்கும் நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களுக்கு நன்றி கூறவேண்டும். இதற்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்தது பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் மைந்தன் ஜெயரத்தினம் அவர்களின் தீர்க்கதரிசனமும் அவர்கள் இட்ட அத்திவாரமும்தான் காரணம்.

எமது அன்னையின் பாரிய அழிவைக் கண்டு எல்லோரும் வெதும்பினோம். அதேவேளை, எமது பாரம்பரிய கல்விமுறை வருங்கால சந்ததியினருக்கு போதுமானதும் அல்ல என்பதையும் தெளிவாக உணர்ந்தனர்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்
திண்ணியராகப் பெறின்"

என்பது வள்ளுவர் பெருமானின் வாக்கு. இத்தகைய மாபெரும் கல்விக்கூடம் எங்கள் சொத்தாக மீண்டும் மிளிர வேண்டும். "உனை நீ அறி" என்னும் பொக்கிசம் மாணவர் மனதில் மீண்டும் பிரகாசித்து ஒளிவிட வேண்டும். மகாஜனவின் பாரம்பரியம் என்பது

பாவலராலும், அவரது திருமகன் ஜெயரத்தினம் அவர்களாலும் உருவாக்கி வளர்க்கப்பட்டு, இன்று அனைத்து மகாஜனன்களாலும் பேணிப் பாதுகாக்கப்படும் ஓர் உன்னத விழுமியமாகும்.

2002ஆம் ஆண்டில் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பொறியியலாளர்கள் கல்லூரிக்கு விஜயம்செய்து அதிபர் திரு.சுந்தரலிங்கம் அவர்களுடன் கலந்துரையாடி, கல்லூரியின் நிலைபற்றி ஓர் அறிக்கை தயாரித்து, கொழும்பு பழைய மாணவர் சங்கம், மற்றும் உலகெங்கும் பரவியிருக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கு அனுப்பிவைத்தனர். மகாஜன அன்னையின் அவல நிலையை அறிந்து கவலையடைந்தனர். 2003ஆம் ஆண்டு உலகெங்குமிருந்து கொழும்பு வந்து கூட்டம் வைத்துக் கலந்துரையாடினர். கொழும்புக்கிளை பழைய மாணவர்கள் 2006ஆம் ஆண்டு கல்லூரியை எவ்வாறு புனருத்தாரணம் செய்வது என்பது பற்றி ஓர் "Master Plan" வெளியிட்டனர். இது ஒரு பாரிய வேலையென்றபடியால், கொழும்புக் கிளையினர் எல்லா பழைய மாணவர்களின் உதவிகளையும் நாடினர். 2007ஆம் ஆண்டு "மகாஜனக் கல்லூரி அபிவிருத்தி நிலையம்", MCFED, திரு.ரீ.லங்காநேசன் தலைமையில் உருவாகியது. இதில் கனடா பழைய மாணவர் சங்கமும் இணைந்துகொண்டது.

இந்நிதியம் மூன்று ஆண்டுகளில் அதிபர் ஒத்துழைப் போடும், பழைய மாணவர் சங்கங்களின் உதவிகளினோடும் பொறியியலாளர் ராமதாஸ் அவர்களின் மேற்பார்வையில் கல்லூரியின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன. இந்நிதியத்தின் இயக்குனர்களாகிய திருவாளர்கள் லங்காநேசன், சிறிகணநாதன், செல்வஸ்கந்தன், ஜெயவர்மன், ஆசிரியர் முருகையா ஆகியோர் அன்றைய போர்சூழ்ந்த, இருண்ட நாட்களில் தமது உயிரையும் மதிக்காது, மகாஜன மாதாவின் கட்டிட வேலைகளைக் கண்காணிப்பதற்காக

கொழும்பிலிருந்து வந்து, அதிபருடனும், என்ஜினியருடனும் உரையாடி, வேலைகளை மேற்பார்வை செய்து, தேவையான உதவிகளைச் செய்து கட்டிட வேலைகளைப் பூர்த்திசெய்தார்கள். நாம் இவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். ஆசிரியர்கள், மாணவர்கள் இப்பாடசாலையைப் பேணிக்காத்து, பராமரித்தற்கு இது ஓர் நல்ல எடுத்துக்காட்டாகும்.

திட்டமிட்டபடி, சகல வேலைகளையும் முடித்து, 2010ஆம் ஆண்டு அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் தலைமையில், உலகெங்குமிருந்து பழைய மாணவர்கள் ஒன்றுகூடி, மூன்று நாட்கள் மகாஜன அன்னையின் 100ஆவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். திருமதி அனந்தசயனன் இளைப்பாற, மகாஜனவின் துடிப்புமிக்க பழைய மாணவன் திரு.வேல் சிவானந்தன் அவர்கள் அதிபரானார். பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைகளில் கூடுதலான மாணவர்கள் தெரிவாகினர். கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் இவரது காலத்தில் பாடசாலை முன்னணியில் திகழ்ந்தது. அதிபர் வேல் சிவானந்தன் அவர்களது தலைமையில் மகாஜன சிற்பி T.T.ஜெயரத்தினம் அவர்களின் 100ஆவது பிறந்ததின விழா மிகவும் சிறப்பாக 3 நாட்கள் இடம்பெற்றன. அதிபர் வேல் சிவானந்தன் அவர்கள் இளைப்பாற, மகாஜனவின் பழைய மாணவன், கணித ஆசிரியர் அன்புக்குரிய திரு.மணிசேகரன் அவர்கள் தலைமைப் பதவியை ஏற்று சிறப்பாக நடாத்திவருகின்றார்.

கடந்த நூறு ஆண்டுகளுக்கு மேலாக பாவலர் துரையப்பாபிள்ளை முதல், சின்னப்பாபிள்ளை, அவர் மைந்தன் T.T.ஜெயரத்தினம், அடுத்தடுத்து வந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முக்கியமாக உலகெங்கும் வாழ் பழைய மாணவர்கள் தங்களது சொந்தப் பாடசாலை எனக் கருதி, பேணிப் பாதுகாத்து, பராமரித்து, இலங்கையில் முன்னணி வகிக்கும் கல்லூரியாக

முன்னெடுத்துச்சென்றது மட்டுமல்லாமல் உலகெங்கும் மகாஜனவின் மைந்தர்கள் இன்றும் செயல்பட்டு வருகின்றார்கள்.

முக்கியமாக, தற்போதைய அதிபர் மணிசேகரன் அவர்களும். ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் தொடர்ந்து மகாஜன மாதாவைப் பேணிப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் மிக்க நன்றி கூறுகிறோம்.

இறுதியாக கனடா பழைய மாணவர் சங்க செயல் பாடுகளைக் கூறவிரும்புகின்றேன். எமது சங்கம் 1989ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, வெள்ளி விழாவை 2014ஆம் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடினோம். எமது சங்கத்தில் 500க்கும் மேற்பட்ட பழைய மாணவர்கள் இருக்கின்றனர். நாம் ஆண்டுதோறும் பின்வரும் நிகழ்ச்சிகளை நடாத்திவருகின்றோம்.

முத்தமிழ் விழா
இளைஞர்களுக்கான "Singing Contest"
Mahajananan Award Ceremony
கோவில் திருவிழா
ஒன்றுகூடலும் ஆண்டுக் கூட்டமும்
இராப்போசன விருந்து
உயர்தர மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்
கணித, பொது அறிவுப் போட்டிகள்

மகாஜனன் போட்டிகளை எமது போசகர் திரு.வே.நந்தீஸ்வரன் அவர்கள் 2007ஆம் ஆண்டு ஆரம்பித்து வைத்தார். தரம் 1 முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கான போட்டிகள் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் கனடாவில் ரொறன்ரோ மற்றும் மொன்றியலிலும், அமெரிக்காவில் நோர்த் கரோலினாவிலும்,

இலங்கையில் கொழும்பிலும், தெல்லிப்பழையிலும், யாழ்ப்பாணத்திலும் நடாத்தி வருகின்றோம். பரீட்சைகள் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் கனடாவாழ் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்தி, மகாஜன அன்னையின் புகழ் ஓங்கியுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். ஏறத்தாழ 1000 மாணவர்களுக்கு மேல் இப்போட்டிகளில் வருடாவருடம் கலந்துகொள்கிறார்கள். இவ்வருடம் பத்தாவது ஆண்டு நிறைவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினோம்.

எமது சங்கம் ஆண்டுதோறும் கல்லூரிக்கு பல உதவிகளைச் செய்து வருகிறது. குறிப்பாக -

- கல்லூரியில் ஆண்டுதோறும் நடைபெறும் ஸ்தாபகர் தின விழா, T.T.ஜெயரத்தினம் நினைவுதினம்.

- விளையாட்டுப் போட்டி.

- மாணவர்களின் உயர்கல்விக்காக பத்து மாணவர்களுக்கு புலமைப் பரிசாக வருடாவருடம் நிதியுதவி செய்து வருகின்றோம்.

- கட்டிட திருத்த வேலை உள்நாட்டு யுத்தம் காரணமாக அழிந்த நிலையிலிருந்த கட்டிடங்களைத் திருத்த MCFED மூலம் ஒரு தொகை நிதியை வழங்கினோம்.

- 2010ஆம் ஆண்டில் 30 கணனித் தொகுதிகளைக் கொண்ட Computer Lab ஒன்று எம்மால் அமைக்கப்பட்டு, எமது முன்னாள் தலைவர் திரு.N.சாந்திநாதன் அவர்களால் அது

திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆண்டுதோறும் இந்தக் கணனித் தொகுதிகளைப் பராமரித்தும் வருகிறோம்.

- கல்லூரியின் 100 ஆவது ஆண்டை முன்னிட்டு, 100 ஆண்டுகளில் இடம்பெற்ற சம்பவங்களை ஆவணப் படுத்தும் பொருட்டு, "மகாஜனன் நூற்றாண்டு சர்வதேச மலர்" ஒன்றை வெளியிட்டோம்.

- 2013ஆம் ஆண்டு T.T.ஜெயரத்தினம் அவர்களின் 100 ஆவது பிறந்த தின விழாவிற்கு பண உதவிசெய்து விழா சிறப்பாக நடைபெற உதவினோம்.

நாம் ரூபா 500,000/-க்கு மேல் இந்த ஆண்டிலிருந்து கல்லூரியின் operational expensesக்கு பண உதவி செய்து வருகின்றோம் என்பதையும் பெருமகிழ்ச்சியோடு கூறுகின்றேன்.

கடந்த பல வருடங்களாக நானும், எமது சங்க உறுப்பினர் களும் கல்லூரிக்கு வருடாவருடம் வந்து நிலைமைகளை அவதானித்து, அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடியதன் பயனாக 2007 முதல் இன்றுவரை ஏறத்தாழ 12.8 மில்லியன் ரூபா நிதியுதவியை MCFED ஊடாக கல்லூரிக்கு வழங்கி யுள்ளோம்.

இறுதியாக அதிபர் அவர்களையும், ஆசிரியர்களையும் மாணவர்களையும், மாணவ சங்கங்களையும் பணிவன்புடன் வேண்டுவது யாதென்றால் -

1. மாணவர்களின் கல்வி வளர்ச்சியை வளர்ப்பதற்கு நூலகம் மிகவும் முக்கியம். மாணவர்கள் நூலகத்தைப் பயன்படுத்தினால்தான் க.பொ.த. உயர்தர, சாதாரண தர

மாணவர்கள் கூடிய புள்ளிகளை எடுத்து இலங்கையில் கல்வியில் முன்னணியில் நிற்க இயலும். நூலகத்தை, அதிபர் அவர்களின் அலுவலகத்திற்குப் பக்கத்தில் முன்பு இருந்தது போல் கொண்டுவந்து நவீனமயப்படுத்தி, E-books, முதலானவற்றை அறிமுகப்படுத்தி மாணவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் கொண்ட ஒரு நூலகத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பது சிறப்பானதாகும்.

2. மலசல கூடங்கள், குடிநீர் பாவிப்பு இடங்கள் யாவும் உடனடியாக இன்னும் சீராகத் திருத்தி எல்லோரும் பாவிக்கும் வண்ணம் சுகாதார வசதிகளுடன் இருக்க வசதி செய்து கொடுக்கப்படவேண்டும்.

3. துரையப்பாபிள்ளை மண்டபம், ஜெயரத்தினம் மண்டபம் என்பவற்றின் திருத்த வேலைகளை, காலந்தாழ்த்தாது உடனடி நடவடிக்கைகள் எடுத்து திருத்தி முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

4. விளையாட்டு மைதானத்தின் மழைகால வெள்ள நிலைமையைப் போக்க சிறந்த நீர் வடிகாலமைப்பு முறை (Drainage System) ஒன்றை வரைந்து அதை அமுல்படுத்தி, மைதான வெள்ளப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும்.

இவற்றிற்கான பண உதவிகளை MCFED மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் என்பனவற்றின் மூலம் உதவுவோம் எனக் கூறுகிறேன்.

முக்கியமாக தாய்ச்சங்க பழைய மாணவர்கள் மற்றும் தலைவர் டாக்டர் இளங்கோ ஞானியர் அவர்களுக்கும், உப தலைவர்

என்ஜினியர் உருத்திரலிங்கம் அவர்களுக்கும், கொழும்பு பழைய மாணவர்கள் மற்றும் தலைவர் திரு.அமிர்தலிங்கம் அவர்களுக்கும், MCFED இயக்குனர் சபை உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஜெயவர்மன் அவர்களுக்கும், லண்டன் பழைய மாணவர்கள் மற்றும் தலைவர் டாக்டர் திருமதி தேவா நாதன் அவர்களுக்கும், மெல்போன் பழைய மாணவர்கள் மற்றும் தலைவர்கள் திரு.சம்பந்தர், திருமதி.அமிர்தகலை அவர்களுக்கும், சிட்னி பழைய மாணவர்கள், மற்றும் தலைவர் திரு.பொன் கேதீஸ்வரன் அவர்களுக்கும், பிரான்ஸ் பழைய மாணவர்கள், மற்றும் தலைவர் திரு.ஹரிஹரன், திரு.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், மற்றும் உலகெங்கும் வாழும் மகாஜன பழைய மாணவர்களுக்கும் மகாஜன மாதாவைப் பேணிப் பாதுகாத்து, பராமரித்து மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு எனது சார்பிலும், கனடா பழைய மாணவர்கள் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனடா பழைய மாணவர்களால் நிறுவி பேணிப் பராமரித்து வருகின்ற கணனித் தொகுதிக்கு மேலும் மெருகூட்ட Micro Media Projector & Screen போன்றவற்றை இன்று வழங்குகிறேன்.
மகாஜனக் கலைக்கூடத்தைப் பேணிப் பாதுகாத்து, நல்ல முறையில் பராமரித்து, மேலும் உயர் நிலைக்கு நாம் எடுத்துச் செல்வோம். கனடா பழைய மாணவர்கள் தொடர்ந்தும் கல்லூரிக்கு உதவிசெய்வோம்.

**வெல்லுக வெல்லுக மகாஜன மாதா!**
**வெல்லுக மகாஜன தலைவர்!**

எனக்கூறி எனது உரையை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி.